بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 8.5.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றிலிருந்து காதியானின் தொடக்க கால சம்பவங்களை குறிப்பிட்டேன். அப்போது அதன் சுற்றுப்புற பகுதிகளைக் குறித்தும் குறிப்பிட்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடக்கச் செல்லும் போது ஒருவர் அவர்களுடன் செல்வார். வழியும் கூட புதர்களின் நடுவே கடந்து செல்லக்கூடிய ஒரு சிறிய வழியாக இருந்தது. இப்போது காதியான் எவ்வளவு முன்னேறியுள்ளது. சாதாரண குடியிருப்புகளின் முன்னேற்றத்தைப் போன்ற முன்னேற்றமல்ல. மாறாக, அல்லாஹ் தஆலா அன்னாரிடம் இந்த முன்னேற்றம் ஏற்படும் என்று கூறியிருந்தான். பெரிய நகரங்கள் மற்றும் சாலைகளுக்கு அருகே உள்ள குடியிருப்புகள் முன்னேறுகினற்து தான். ஆனால் காதியான் ஒரு மூலையில் இருந்தது. இருந்தும் கூட இறைவன் முன்னேற்றத்திற்கான செய்தியைத் தந்தான். பிறகு வளர்ச்சியும் ஏற்பட்டது. இக்காலத்தில் காதியானை காண்பதற்காக மக்கள் தூர தூரத்திலிருந்து வருகின்றனர். மாறாக, ஜமாஅத்தின் வசமிருக்கின்ற காதியான் பகுதியில் ஜமாஅத் கட்டிடங்களில் விரிவாக்கம், அழகு காரணத்தால் சில அரசு விழாக்களையும் கூட அங்கு நடத்துவதற்காக அரசாங்கம் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த முன்னேற்றம் தொடர்பான சில அடையாளங்களை விளக்கமாகக் கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள். பாருங்கள். அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக எத்துனை மகத்தான அடையாளங்களை காட்டியுள்ளான். நீங்கள் அக்காலத்தை பார்க்காவிட்டாலும் நாங்கள் பார்த்துள்ளோம். இத்துனை அருகிலுள்ள காலத்திலுள்ள அந்த அடையாளங்களை நீங்கள் சிந்தித்து உணருவது ஒன்றும் அதிக சிரமமல்ல. மற்ற அடையாளங்களை விடுங்கள். மஸ்ஜிது முபாரக்கைப் பாருங்கள். அங்கு ஒரு தூண் மேற்கிலிருந்து கிழக்காக நிற்கிறது. அதற்கு வடக்கில் உள்ள பகுதி தான் அக்காலத்தின் மஸ்ஜிது ஆக இருந்தது. சில நேரங்களில் இரு வரிசைகள், சில நேரங்களில் ஒரேயொரு வரிசை மட்டும் இருக்கும். அப்பகுதியில் இரு வரிசைகள் தொழுகைக்காக நிற்க முடியும். சில வேளை இரு வரிசைகளும் சில வேளையில் ஒரு வரிசையும் நிற்கும். எனக்கு நினைவில் உள்ளது. அப்பகுதியில் மூன்றாவது வரிசையில் தொழுகைக்காக மக்கள் நின்ற போது வியப்புக்கு எல்லையே இருக்கவில்லை. 15 அல்லது 16 தொழுகையாளிகள் வந்த போது இப்போது நிறைய பேர் தொழுகைக்கு வந்து விட்டார்கள் என்று கூறுவோம். யோசித்துப் பாருங்கள். இறைவனது அருள் இறங்கி விட்டால் அது எதனை எப்படியெல்லாம் ஆக்கிவிடுகிறது ?

பிறகு இதில் நிகழ்ந்த மாற்றங்களை குறிப்பிட்டவாறு, எனக்கு நினைவில் உள்ளது. ஒருவர் அன்னாரின் நெருங்கிய உறவினரக இருந்தார். அவரிடமும் மாற்றங்கள் ஏற்பட்டது. முதலில் எதிரியாக இருந்தார். பிறகு அந்த உறவினர் ஜமாஅத்திலும் இணைந்தார். கூறுகிறார்கள். எனக்கு நினைவில் உள்ளது. பின்னாளில் அஹ்மதியாகிவிட்ட எனது பெரியன்னை அவ்விடத்தை நான் கடக்கும் போது ஒரு பஞ்சாபி மரபுத் தொடரை கூறுவார். எனது தாயார் இந்தியாவைச் சார்ந்தவராக இருந்ததால் என்னால் அதன் பொருளை புரிய முடிந்ததில்லை. நான் எனது தாயாரிடம் அதுபற்றி கேட்டேன். தாயார் கூறினார்கள். அந்த வார்த்தைக்குப் பொருள் காகத்தைப் போன்றே அதன் குஞ்சு என்பதாகும். அதாவது காகம் உமது தந்தையாம். நவூதுபில்லாஹ். அதன் குஞ்சு நீர்.

ஆனால் நான் இன்னொரு காலத்தையும் பார்த்தேன். இதையெல்லாம் கூறிய அந்த பெரியம்மா முன்னால் நான் எப்போதாவது செல்ல நேரிட்டால் என்னை மிகவும் கண்ணியப்படுத்துவார்கள். எனக்காக மெத்தையை எடுத்து விரிப்பார்கள். மரியாதையுடன் கவனிப்பார்கள். இந்த எல்லா விஷயங்களையும் பார்த்து உங்களால் புரிய முடியும். இறைவன் உலகத்தை மாற்ற விரும்பினால் எவ்வாறு மாற்றி விடுகிறான். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சம்பவங்கள் ஈமானில் புத்துணர்வையும், வளர்ச்சியையும் ஏற்படுத்துமாறும், கவனமூட்டவும் நமக்கு இறைநெருக்கம் ஏற்பட காரணமாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் உதவிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் இருக்கிறது என்று நமக்கு தெரிவிப்பவையாக இருக்க வேண்டும். நாமும் கூட அதிலிருந்து பங்கு பெற வேண்டும். காதியானில் வசிக்கும் அஹ்மதிகள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நம்மில் பலர் இதனை அறிந்துள்ளோம். இதனைப் பற்றி அவ்வப்போது கூறவும் படுகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியான் வளர்ச்சியடையும் என்று கூறியுள்ளார்கள். கடந்த குத்பாவில் நான் சம்பவங்களைக் கூறினேன். காதியான் பியாஸ் நதிவரை பரவிவிடும். இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு கனவில் அடிப்படையில் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த முன்னறிவிப்பை பற்றி குறிப்பிடும் போது காதியான் வளர்ந்து வளர்ந்து பியாஸ் நதிவரை சென்றடைந்து விடும் என்பதை பல்வேறு கோணங்களில் எடுத்துரைத்து ஜமாஅத் அன்பர்களுக்கு அவர்தம் பொறுப்பு குறித்து கவனமூட்டினார்கள். இந்த பொறுப்பு காதியானில் வசிப்பவர்களுக்கு மட்டுமல்ல. ஒவ்வொரு ஜமாஅத் தனி நபரும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருபுறம் இந்த ஆதாரம் மூலம் அன்னார் நம்மை தொழுகையின் பக்கம் கவனமூட்டினார்கள். அதிகமானவர்களுக்கு தொழுகையுடன் என்ன தொடர்பு என்று

நினைக்கலாம். இது தான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய கருத்துக்களில் உள்ள ஓர் அழகாகும். ஒரு விஷயத்தின் பல்வேறு அம்சங்களை எடுத்துக் காட்டி அதன் முக்கியத்தை மேலும் வெளிச்சமாக்கிக் காட்டி விடுவார்கள்.

எனது கருத்தின்படி இதைப் பற்றி அதாவது மஸ்ஜிது அக்ஸா மிகவும் விரிவுபடுத்தப்படும். எந்த அளவுக்கு நாம் விரிவுபடுத்த வேண்டி வரும் என்றால் 4 இலட்சம் பேர் தொழுகைக்கு வரத்தக்கதாக இருக்க வேண்டும். இது அல்லாஹ் தஆலாவுடைய எவ்வளவு பெரிய அருளாகும். மக்களின் பள்ளிகளோ காலியாக உள்ளது. இங்கோ நாம் எவ்வளவு தான் பெரிதாக ஆக்கினாலும் அது குறுகியதாகி விடுகிறது. எதுவரையென்றால் தொழுவதற்கு இடமில்லாமல் போய் விடுகிறது.

பிறகு அன்னார் தமது இன்னொரு சம்பவத்தை கூறினார்கள். அந்த சம்பவமானது அன்னார் ஜுமுஆ தொழுகைக்காக சென்றார்கள். கூறுகிறார்கள். என் வயது அப்போது 15, 16 ஆக இருந்தது. நான் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் ஒரு மனிதர் பள்ளியில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தார். பள்ளியில் தொழ இடமில்லை என்று அவர் கூறினார். உடனே அவர் பேச்சை கேட்டு நானும் திரும்பி விட்டேன். வீட்டில் லுஹர் தொழுது விட்டேன். உள்ளபடியே பள்ளி நிறைந்து விட்டதா? அங்கு உட்கார இடமுள்ளதா ? இல்லையா ? என்று பார்க்காமல் இருந்து எனது தவறு தான். எவ்வாறிருப்பினும் நான் சிறுவதிலேயே தொழுகைய பேணுபவனாக இருந்தேன். இதுவரை ஒரு தொழுகையையும் வீணாக்கியதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் ஒருபோதும் தொழுதீரா இல்லையா என்று கேட்டதில்லை.

கூறுகிறார்கள். எனக்கு நினைவுண்டு. எனக்கு 11 வது வயதாக இருந்தது. ஒரு நாள் நான் லுஹா அல்லது இஷ்ராக் வேளையில் ஒளு செய்து விட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கோட்டை அணிந்தவாறு இறைவனுக்கு முன் மிக அழுதேன். நான் ஒருபோதும் தொழுகைய விட மாட்டேன் என்று அல்லாஹ்வின் அருளால் இந்த உறுதிமொழிக்கு பிறகு நான் தொழுகையை விட்டதே விடையாது. அந்நாளில் அல்லாஹ் தஆலா எனது கவனமின்மையை அகற்ற விரும்பினான். சில நேரங்கள் சில அசட்டையினால் ஜமாஅத்துடன் தொழுவதில் கவனமில்லாமல் போய் விட்டாலும் அதனையும் அல்லாஹ் தஆலா அகற்ற விரும்பினான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நான் ஜுமுஆ தொழாமல் வருவதைக் கண்டு நீர் ஜுமுஆ தொழ போகவில்லையா ? என்று கேட்டார்கள். நான் போகத் தான் செய்தேன். ஆனால் தொழுவதற்கு பள்ளியில் இடமில்லை என்று கூறினேன். நான் ஏதோ சொல்லி விட்டேன். கூறுகிறார்கள். நான் உள்ளத்தில் மிகவும் பயந்து விட்டேன். அடுத்தவர் கூறியதை ஏன் ஏற்று விட்டோம் ? அவர் உண்மை சொன்னாரா ? பொய் சொன்னாரா ? அவர் உண்மையை சொல்லியிருந்தால் நல்லது. பொய் செல்லியிருந்தாலோ அவர் சொன்னதை நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமும் சொல்லி விட்டேனே ? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னிடம் கோபம் கொள்வார்களே என்று பயந்தேன். கூறுகிறார்கள். நான் உள்ளத்தில் மிகவும் பயந்து போய் விட்டேன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன சொல்வார்களோ என்று.

இவ்வளவுக்குள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் தொழுதுவிட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை நலம் விசாரிப்பதற்காக வந்தார்கள். அன்னார் சிறுநீரக வலியின் காரணத்தால் தொழ போகவில்லை. இன்று என்ன ஆகப்போகிறதோ என்று நான் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்தேன். அவர்கள் வந்தவுடனேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கேட்டார்கள். இன்று நிறைய பேர் தொழ வந்திருந்தார்களா? பள்ளியில் தொழுவதற்கு இடமில்லையா ? அன்னார் இவ்வாறு கேட்டதும் எனது உள்ளம் அமர்ந்து விட்டது. அவர் உண்மை சொன்னாரா ? பொய் சொன்னாரா தெரியவில்லையே ? ஆனால் அல்லாஹ் எனது கண்ணியத்தைக் காத்தான். அவர்களிடம் இறைவனுக்கு நன்றி சொல்லும் இயல்பு அதிகமாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைக் கேட்டதும் அவர்கள் கூறினார்கள். ஹுஸூர் அல்லாஹ்வுடைய பெரும் கருணையால் பள்ளி நிறைந்து விட்டது. உட்காருவதற்கு சிறிதும் இடமில்லை. அந்த மனிதர் கூறியது உண்மை தான் என்று அப்போது நான் புரிந்து கொண்டேன். அல்லாஹ் தஆலா நமது முன்னேற்றத்திற்கு இந்த வழியைத் தான் வைத்துள்ளான். பள்ளியில் மக்களால் நிறைந்து இருக்க வேண்டும். எதுவரை நீங்கள் பள்ளிவாயிலை நிரப்புவீர்களோ அதுவரை நீங்கள் நிரம்பியிருப்பீர்கள். நீங்கள் பள்ளியை விட்டு விட்டால் அப்போது இறைவன் உங்களையும் விட்டு விடுவான்.

காதியானின் விரிவாக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் விரிவாக்கம் வெறும் எண்ணிக்கையைப் பொருத்ததல்ல. மாறாக, விரிவாக்கம் நமது குடியிருப்புகளை அதிகரிப்பதுடன் கூடவே இறைவனது வீட்டினை நிறைப்புவதை சார்ந்து இருக்கிறது. ஓர் அஹ்மதி அவர் காதியானில் வசிப்பவராக இருந்து அவர் காதியானின் வளர்ச்சியை காண விரும்பினால் அல்லது ஒருவர் ரப்வாவில் வசிப்பவராக இருந்து ரப்வாவின் முன்னேற்றத்தை காண விரும்பினால் அல்லது அவர் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் பங்கெடுக்க விரும்பினால் மேலும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை காண விரும்பினால் குடியிருப்புகளுடன் கூடவே பள்ளிகளை நிறைப்பதும் கூட மிகமிக அவசியமாகும். இறையருளால் தான் இந்த வளர்ச்சிகள் கிடைக்கிறது. அல்லாஹ்வுடைய அருள் அவனது வீட்டை நிறைப்பதன் மூலமும் அதிகமாகிறது. ஆகவே இன்று நாம் பள்ளியின் கட்டுமானங்களைக் குறித்து பேசுகின்றோம். அதேபோல் எல்லா இடங்களிலும் பள்ளி சிறியதாக்குவதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். இறைவனுடன் தூய தொடர்பு வைப்பதற்கும் முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் இறைவன் நம்மை ஒருபோதும் கைவிடாமல் இருக்க வேண்டும். அதன் மூலம் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒவ்வொரு முன்னறிவிப்பையும் சுயமும் நிறைவேற காண வேண்டும்.

பிறகு காதியானில் நிலைமை எவ்வாறிருந்தது என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முன்னறிவிப்புகள் குறித்து மேலும் சில விஷயங்களை சுட்டிக் காட்டினார்கள்.

கூறுகிறார்கள். நான் காதியானின் முன்னேற்றம் பற்றிய முன்னறிவிப்புகளைப் பற்றி கூறுகிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு காதியான் கிராமம் வளர்ச்சி அடைந்து பெரும் நகரமாகி விடும் என்று தெரிவிக்கப்பட்டது. மும்பை, கல்கத்தா போன்ற நகரங்களைப் போல் 9 அல்லது 10 இலட்சம் வரை மக்கள் தொகை பெருத்துவிடும். நான் ஏற்கனவே கூறியது போன்று அவர்கள் காலத்துக்கு ஏற்ப கூறப்பட்ட மதிப்பீடு ஆகும். அதன் மக்கத் தொகை வடக்கிலும் கிழக்கிலும் விரிவடைந்து காதியானிலிருந்து 9 மைல் தூரத்திலுள்ள பியாஸ் நதி வரை சென்றுவிடும். இந்த முன்னறிவிப்பு அச்சாகி வெளிவரும் போது காதியான் மக்கள் தொகை ஏறக்குறைய 2000 ஆக இருந்தது. ஒரு சில உறுதியான வீடுகள் தவிர பிற அனைத்தும் பச்சை செங்கற்களால் கட்டப்பட்டவை. வீடுகளின் விலை எவ்வளவு குறைவு என்றால் மாத வாடகை 4, 5 அணாவுக்கு வீடுகள் கிடைத்தன. வீடுகட்டும் நிலங்கள் எவ்வளவு மலிவு என்றால் 10, 12 ரூபாய்களில் நல்ல வசதியான வீடு கட்டும் அளவுக்கு நிலங்கள் கிடைத்தன. கடை வீதிகளின் நிலை எவ்வாறிருந்தது எனில் 2, 3 ரூபாய்க்கு ஒரே நேரத்தில் மாவு வாங்க முடியாது. அனைவரும் மாவு வைத்திருப்பதறகு பகரமாக கோதுமை வைத்திருந்தனர். அதை மாவாக்கி ரொட்டி தயார் செய்பவர்களாக இருந்தனர். மாவரைக்கும் எந்திரம் இருந்தது.

கல்வியை பொருத்த அளவில் ஒரு அரசு பள்ளிக்கூடம் இருந்தது. தொடக்கக்கல்வி வரை இருந்தது. அதன் ஆசிரியர்கள் சிறு அலவன்ஸ் வாங்கிக் கொண்டு தபால் வேலைகளையும் பார்த்து வந்தனர். வாரத்திற்கு ஒருமுறை கடிதம் வந்தது. முன்னறிவிப்புகள் நிறைவேறுதவற்கான வெளிப்படையான எந்த வாய்ப்பும் இருந்ததில்லை. 11 மைல் தூரத்தில் தான் ரயில்வே இருந்தது. அதன் பாதையை மிகவும் சீரற்றதாக இருந்தது. எந்த தொழிலகங்களும் காதியானில் இருந்ததில்லை. அதன் மூலம் தொழிலாளர்கள் மூலம் ஒரு ஊரில் குடியிருப்புகள் வளர வாய்ப்பு ஏற்படுவதற்கு ? எந்த அரசாங்க அலுவலகங்களும் காதியானில் இருந்ததில்லை. அதன் மூலம் வளர்ச்சி ஏற்படுவதற்கு? மாவட்ட அலுவலகமோ, கோட்டாட்சியர் அலுவலகமோ இருந்ததில்லை. காவல் நிலையமும் இருந்தில்லை. பெரும் சந்தைகளும் இருந்ததில்லை. முன்னறிவிப்புகள் செய்யப்பட்ட போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சீடர்கள் சில நூறு பேருக்கு மேல் இருந்ததில்லை. அவர்களை அங்கு வந்து வசிக்குமாறு கட்டளையிட்டு ஊரை வளர்ச்சி அடையச் செய்வதற்கு!

இந்த சூழ்நிலையை முன்னிருத்தி இந்த முன்னறிவிப்பை ஆய்வு செய்தவாறு இக்கால காதியானையும் பாருங்கள். இப்போது காதியான் பியாஸ் நதி வரை பரவாவிட்டாலும் கூட அல்லாஹ்வின் அருளால் வளர்ந்து கொண்டிருக்கிறது. இருந்தும் கூட இன்றைய காதியானை பார்த்தே ஒரு மனிதர் இதனை ஓர் அடையாளம் என்று அறிய முடியும். ஆகவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கண்ட கனவின் பொருள் இதனை விட அதிகமாக காதியான் விரிவடையாது என்பதல்ல. பியாஸ் நதி காதியானுக்குள் ஓடுகிற ஒரு வாய்க்காலாக ஆகிவிடும் அளவுக்கு காதியான் வளர்ச்சி பெற்று விடுவது கூட ஒரு நேரத்தில் சாத்தியமாகும். காதியான் அதை விட விரிந்து ஹோஷ்யார்பூர் மாவட்டம் வரை செல்வதும் சாத்தியமேயாகும். காதியானில் இப்போது ஜமாஅத்தின் கட்டிடங்களின் அதிகரிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது தவிர ஜமாஅத் ஊழியர்களுக்கான குடியிருப்புகள், பிளாட்டுகள், பிற கட்டிடங்கள் உருவாகின்றன. அதே வேளையில் காதியானில் வசிப்பவர்களுக்கு அவர்களின் நிலைமைகளை ஒன்றாக்கி பெரும் பெரும் கட்டிடங்களை கட்டுவதற்கான வாய்ப்பை அல்லாஹ் தருகிறான். இதுதவிர இந்தியாவின் அஹ்மதிகளுள் வசதிபடைத்த செல்வந்தர்கள் தமது கட்டிடங்களை அங்கு கட்டுகின்றனர். மேலும் உலகம் முழுவதும் உள்ள அஹ்மதிகளின் கவனமும் இதன் பக்கம் உள்ளது. ஒவ்வொரு அஹ்மதியும் இதனையே கவனத்தில் கொள்ளவும் வேண்டும். இதுவே முன்னேற்றத்திற்கான இரகசியமாகும். ஒவ்வொரு முன்னேற்றத்தின் இரகசியமும், முன்னேற்றத்தில் பங்கு பெறுவதன் இரகசியமும் இறைவனது வீடுகளை நிரப்புவதும் அதனுடன் தொடர்பை ஏற்படுத்துவதும் ஆகும். எங்கு இறைவனை ஒருவர் விட்டு விட்டாரோ அங்கு அவரை இறைவனும் விட்டு விடுகிறான். இது காதியானுடைய வளர்ச்சியுடன் மட்டும் தொடர்புடையதல்ல. முழு ஜமாஅத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியுடன் தொடர்புடைய விஷயமாகும். அதாவது உங்கள் பள்ளியை நீங்கள் சின்னதாக்கி விட வேண்டும். இறைவனது உதவி ஒத்தாசைகள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.

நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். காதியானின் முன்னேற்றம் மட்டுமல்ல. மாறாக, ஜமாஅத்தின் எல்லா வகையான வளர்ச்சிக்கான இறை வாக்குறுதி உள்ளது. ஒரு அடையாளமும் நிறைவேறும் என்ற எண்ணம் அதிகரிக்கிறது. சில வேளை சில சூழ்நிலைகளில் சிலரிடம் ஓர் நிம்மதியின்மை உருவாகி விடுகிறது. சுயமே ஒரு மதிப்பீடு செய்து ஒரு முடிவுக்கு வந்து விடுகின்றனர். இந்த பணி இன்ன முன்னறிவிப்புக்கு ஏற்ப நடக்கும் என்று. சிலர் நெருக்கடியான சூழ்நிலைகளைப் பார்த்து குழப்பமும் அடைகின்றனர்.

என்ன தான் நிலைமைகள் ஏற்பட்டாலும் நாம் அவநம்பிக்கை கொள்ளக் கூடாது.உங்கள் ஈமானை உறுதியாக வையுங்கள். இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்துங்கள். உங்கள் ஈமானின் உறுதிக்காக துஆவும் செய்யுங்கள். சூரியன் உதிக்கும். நிச்சயமாக உதிக்கும். இன்ஷா அல்லாஹ். உதவி வரும். நிச்சயமாக வரும்.

சில பல்வேறுபட்ட செய்திகளை எடுத்து வைக்கிறேன். வக்ஃபே நவ் வகுப்பில் ஒரு சிறுமி கேள்வி கேட்டார். கபரில் போர்வை போடுதல் மலர் தூவுவதில் என்ன தவறு ? அது அனுமதிக்கப்பட்டதா ? இல்லையா? இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு தெரிய வந்த போது அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கபரில் இருந்து சிலர் பரக்கத்திற்குரிய பொருளாக கருதி சிறிது மண்ணை எடுத்துச் செல்கின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கபரில் மலர் தூவுகின்றனர். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனால் ஈமானும் வீணாகி விடுகின்றது. முதலில் கபரில் மலர் தூவுவதால் மண்ணறையில் இருப்பவருக்கு என்ன பயன் ஏற்பட முடியும் ?

உலகில் நாம் பார்க்கின்றோம். ஒருவர் அடக்கப்பட்டால் மண்ணாகி விடுகிறார். இது சட்டமாகும். இயற்கை சட்டமாகும். அத்தகைய நிலையில் வெளிப்படையான மலர்களைக் கொண்டு அவருக்கு என்ன தர முடியும் ? ஆன்மாக்களோ நற்கூலி தண்டனை ஆகியவற்றை பெறுதற்காக இறைவன் முன் சென்று விட்டன. அந்த ஆன்மாவுக்கு நற்பலன் கிடைப்பதற்காக துஆ செய்ய வேண்டும். அவருக்கு இறைவன் ரஹ்மத் செய்வதற்காக. இவ்வகையான இணை வைப்புக்குரிய செயல்களை கப்ரில் சென்று செய்யக்கூடாது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் அவ்வாறு செய்வதில்லை. ஆனால் சில நேரங்களில் இதுபோன்ற விஷயங்கள் வருகின்றன. பூக்களை தூவுவது போன்றவை அர்த்தமற்ற செயல்கள். நமது கபர்களில் அது போன்று செய்யக்கூடாது. இன்னொரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூல் எழுதப்பட்டதும், வாசிக்கப்பட்டதுமான சம்பவம் ஓர் வியத்தகு சம்பவமாகும். அதன் மூலம் சில கோணலான உள்ளம் கொண்டோரின் இயல்பையும் நாம் தெளிவாக உணர முடிகிறது. அன்னார் கூறுகிறார்கள். 1897 ல் லாஹூரில் மாபெரும் மாநாட்டின் அடித்தளமிட்ட போது இஸ்லாம் பற்றியும் அதில் ஒரு கட்டுரை எழுதுமாறு கூறப்பட்டது. காஜா சாஹிப் தான் அந்த தூதுச் செய்தியை கொண்டு வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அப்போது வயிற்றுப் போக்கு இருந்தது. அந்த வேதனையிலும் அன்னார் அந்த கட்டுரையை எழுத தொடங்கினார்கள். இறையருளால் எழுதி முடித்தார்கள். காஜா சாஹிபிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த கட்டுரையை தந்த போது அவர் அவநம்பிக்கையை வெளிப்படுத்தினார். இந்த கட்டுரை கண்ணியமாக பார்க்கப்படாது. எள்ளி நகையாடப்படும் என்று கூறினார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இறைவன் கூறியிருந்தான். இந்த கட்டுரை உயர்வானதாக இருந்தது என்று.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இறை அறிவிப்பைப் பற்றி ஒரு பிரசுரம் எழுதி வெளிடுவதை பொருத்தமான செயலாக கருதினார்கள். பிரசுரத்தை லாஹூர் முழுவதும் விநியோகிக்கவும் சுவரில் ஒட்டவும் செய்ய விரும்பினார்கள். காஜா சாஹிபுக்கும் ஆறுதல் கூறினார்கள். ஆனால் காஜா சாஹிபோ இந்த கட்டுரை வீணானது பயனற்றது ஒரு முடிவு செய்து விட்டிருந்தார் என்று நவூதுபில்லாஹ். ஏனெனில் காஜா சாஹிபின் கருத்துப்படி இறைவனால் கட்டுரை உயர்ந்தது என்று கூறப்பட்ட அக்கட்டுரை பெரும் ஆராய்ச்சியாளர்களுக்கு மத்தியில் எடுத்து வைக்க தகுதியற்றதாக இருந்தது. அந்த கட்டுரையை வாசிக்கப்பட வேண்டிய நாள் வந்தது. கட்டுரை வாசிக்கப்பட தொடங்கியதும் மக்கள் சிலையென அமர்ந்தனர். இதனை எல்லோரும் அறிவர். ஏற்போரும் மறுப்போரும் ஒன்றுபட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சொற்பொழிவை எல்லாவற்றிலும் உயர்ந்தது என்று தீர்மானித்தனர். இறைவனால் கூறப்பட்ட வார்த்தை நிறைவேறியது. ஆனால் இந்த வலுவான முன்னறிவிப்பை காஜா சாஹிபின் பலஹீனமான ஈமான் மறைத்து விட்டது.

மக்களிடம் எந்த அளவுக்கு மார்க்க ரோஷம் இருக்க வேண்டும் என்பதனை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறுகிறார்கள். ஒரு கூட்டத்தில் தம்மைச் சாராதவர்களை ஏசுகிறார்கள் என்ற தகவல் கிடைக்கும் என்றால் நாம் அங்கு செல்ல வேண்டிய அவசியம் என்ன ? அங்கு அவர்கள் செல்வதன் மூலமே தெரிய வருகிறது அவர்கள் உண்மையான தன்மான உணர்வின் தகுதி உடையவராக இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்தில் ஆர்யர்கள் லாஹூரில் ஒரு மாநாடு நடத்தினர். அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய கட்டுரை படிக்கப்பட்டது. அது முழுவதும் அன்பு, நேசம் பற்றியதாக இருந்தது. அதற்குப் பிறகு ஓர் ஆரியர் ஒரு கட்டுரையைப் படித்தார். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கடுமையான ஏச்சும் பேச்சும் இருந்தது. மாநாட்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசப்படுகிறது என்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறிய போது அன்னார் கடும் கோபம் கொண்டார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிறிது நேரத்திற்குப் பிறகு அதை மன்னித்து விட்டார்கள்.

ஜுமுஆவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய தர்வேஷ் ஹாஜி மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். அன்னார் மே 1, 2015 அன்று காதியானில் தன்னுடைய 85 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ மர்ஹூமுடைய சிறப்பம்சங்களை எடுத்துக் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ் அவர்களுடைய சந்ததிகளுக்கு அவர்களது அடியொற்றி நடப்பதற்காக நல்வாய்ப்பை தருவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 8.5.15
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516